**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC .196/2014** | | |
| **PW/DW/CW** | : | **PW1** | | |
| **Name** | : பொன்னுதாய் | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : கோதண்டன் | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

(A1, A2 absent petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **18.03.2024**

---

**முதல் விசாரணை:**

நான் தற்போது கேரளாவில் குடியிருந்து வருகிறேன். 10 வருடங்களுக்கு முன்பு A.இராமநாதபுரத்தில் குடியிருந்தோம் . கோதண்டன் எனது கணவர். எனது கணவர் இறந்து 7 வருடங்களாகிறது. எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 10 வருடங்களுக்கு முன்பு எங்களுக்கும் எனது கொழுந்தன் வீட்டிற்கு சொத்து பிரச்சனை காரணமாக தகராறு இருந்து வந்தது. காலை 11.00 மணியளவில் எங்கள் வீட்டிற்கு நானும் எனது கணவர் மற்றும் மகன் இருந்தபோது எதிரிகள் இருவரும் வீட்டிற்குள் நுழைந்து எங்கள் மூவரையும் அசிங்கமாக பேசினார்கள், எனது கணவரை 1வது எதிரி ஜெகன் ராமன் கம்பால் முதுகில் அடித்து ஊமை காயத்தை ஏற்படுத்தினார்.பின்னர் எனது மகனின் கையில் கம்பால் அடித்து 1வது எதிரி ரத்த காயத்தை ஏற்படுத்தினார். 2வது எதிரி விஜயா கம்பால் எனது வலதுபுற தொடையில் அடித்ததில் எனக்கு இரத்த காயம் ஏற்பட்டது. எனது வீட்டில் இருந்த பிரிட்ஜ், டிவி, ஃபேன், ஆகியவற்றை அடித்து உடைத்ததில் ரூபாய் 5000/- மதிப்பிலான பொருட்கள் சேதம் ஏற்பட்டது. சாட்சிகள் மாயாண்டி, கல்யாணி ஆகியோர் சத்தம் கேட்டு வீட்டிற்குள் வந்து எதிரிகளை விலக்கிவிட்டார்கள். விலக்கிவிட்டபோது எதிரிகள் இருவரும் கம்பை காட்டி என்றைக்கு இருந்தாலும் உங்களை நான்தான் கொல்லுவேன் என்று மிரட்டினார்கள். எனது கணவர் எதிரிகள் மீது புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்கு தயாராக இல்லை )**

S.d./Ponnuthai
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.